## கற்பித்தல் முறைகள்

இலங்கை திறந்த பல்கலைக்கழகமானது தொலைதூரக் கல்வி நிறுவனமாக கற்பித்தல் முறையில் வேறு நிறுவனங்களில் இருந்து குறிப்பிடத்தக்களவில் வேறுபடுகின்றது. இங்கு கற்றல் நடவடிக்கைகளுக்காக தங்களைப் பதிவு செய்து கொள்ளும் மாணவர்கள் சுய கற்றலுக்காக வடிவமைக்கப்பட்டுள்ள பாடப்பொதியைப் பெற்றுக் கொள்கின்றார்கள். இதன்மூலம் மாணவர்கள் சுயமாகத் தங்கள் கற்றற் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றார்கள். இதற்கான உதவிகள் மற்றும் வழிகாட்டல்கள் நாட்பாடசாலைகளில் இடைத்தொடர்புசார் கற்றல் அமர்வுகள் மூலம் வழங்கப்படுகின்றன. நாட்பாடசாலைகள் இடைத்தொடர்புசார் கற்றல் அமர்வுகள் வார இறுதி நாட்களில் நடாத்தப்படுகின்றன. மாணவர்கள் நாட்பாடசாலை இடைத்தொடர்புசார் கற்றல் அமர்வுகளில் கலந்து கொள்வதோடு தொடர் மதிப்பீட்டுப் பரீட்சைகளுக்குக் கட்டாயமாகத் தோற்ற வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றார்கள்.

இக்கற்கைநெறிக்கான பாடப்புத்தகங்கள் பெரும்பாலும் அச்சுப்பிரதிகளாகவும், மென்நகல்களாக ஒலிப்பதிவுகளாகவும், குறிப்புக்களாகவும் வழங்கப்படுவதோடு சில பாடநெறிகளுக்குரிய பாடப்பகுதிகள் காணொளிகளாகவும் வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாணவர்கள் மேலதிக வாசிப்புக்காக பரிந்துரைக்கப்பட்ட நூல்கள், ஆய்விதழ்கள் மற்றும் ஆய்வேடுகள் போன்றவற்றைச் சுயகற்றலுக்காகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றார்கள். அத்தோடு, நாட்பாடசாலைகளில் இடைத்தொடர்புசார் கற்றல் அமர்வுகளில் இடம்பெறும் கலந்துரையாடல்கள், மற்றும் முன்வைத்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடவும் பயிற்றுவிக்கப்படுவார்கள்.

## மதிப்பீடு

இலங்கை திறந்த பல்கலைக்கழகப் பரீட்சை சட்டதிட்டங்களுக்கு அமைவாக, இந்நிகழ்ச்சித் திட்டம் இக்கற்கைநெறி தொடர்பான தொடர் மதிப்பீடானது, ஒப்படைகளையும் பரீட்சைகளையும் அடிப்படையாகக் கொண்டு இடம்பெறுவதோடு ஒவ்வொரு கல்வியாண்டின் இரு பருவ இறுதிகளிலும் (Semester) இறுதிப் பரீட்சை நடாத்தப்படும். இக்கற்கை நெறியில் தொடர் மதிப்பீட்டுப் பரீட்சையானது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. தொடர் மதிப்பீட்டுப் பரீட்சையில் 40 வீதப்புள்ளிகளும் இறுதிப் பரீட்சையில் 60 வீதப்புள்ளிகளும் கணக்கில் கொள்ளப்பட்டு இறுதி மதிப்பீடு மேற்கொள்ளப்படும். இறுதிப்பரீட்சையில் 35 வீதத்துக்குக் குறைவான புள்ளிகளைப் பெறின் தொடர் மதிப்பீட்டுப் பரீட்சையில் பெறப்பட்ட புள்ளியிலிருந்து 40 வீதம் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது.

## பிராந்திய நிலையங்கள்

| | | |
|---|---|---|
| WP10 | - | கொழும்பு பிராந்திய நிலையம் |
| CP20 | - | கண்டி பிராந்திய நிலையம் |
| SP30 | - | மாத்தறை பிராந்திய நிலையம் |
| NC50 | - | அனுராதபுர பிராந்திய நிலையம் |
| UP80 | - | பதுளை பிராந்திய நிலையம் |
| NW70 | - | குருநாகல் பிராந்திய நிலையம் |
| SG90 | - | இரத்தினபுரி பிராந்திய நிலையம் |
| NP40 | - | யாழ்ப்பாண பிராந்திய நிலையம் |
| EP60 | - | மட்டக்களப்பு பிராந்திய நிலையம் |

## தெரிவு செய்யப்பட்ட கற்கை நிலையங்கள்

| | | |
|---|---|---|
| NP44 | - | மன்னார் கற்கை நிலையம் |
| NP41 | - | வவுனியா கற்கை நிலையம் |
| NP42 | - | கிளிநொச்சி கற்கை நிலையம் |
| EP62 | - | திருகோணமலை கற்கை நிலையம் |
| NW71 | - | புத்தளம் கற்கை நிலையம் |
| CP21 | - | ஹட்டன் கற்கை நிலையம் |

***குறித்த கற்கை நிலையத்தில் 15 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பதிவு செய்திருப்பின் மாத்திரமே அந்நிலையத்தில் கற்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மாணவர்களது எண்ணிக்கை குறைவாக இருப்பின் அருகிலுள்ள பிராந்திய நிலையத்திலேயே கற்கை நெறிகளைத் தொடர முடியும் என்பதைக் கவனத்திற் கொள்க.

## பாடநெறிக்கான கட்டணங்கள்

### மட்டம் - 03

| | | |
|---|---|---|
| பதிவுக்கட்டணம் | ரூ. | 500.00 |
| வசதிக்கட்டணம் | ரூ. | 2500.00 |
| நூலக வசதிக்கட்டணம் | ரூ. | 100.00 |
| ஆங்கிலக் கற்கை (ஆரம்ப மட்டம்) | ரூ. | 3000.00 |
| தகவல் தொழில்நுட்ப கற்கை | ரூ. | 5500.00 |
| 30 திறமை மட்டங்களுக்கு | ரூ. | 62,400.00 |
| (ஒரு திறமை மட்டத்திற்கு ரூ.2080.00) | | |
| மொத்தம் | ரூ. | 74,000.00 |

மேற்குறிப்பிடப்பட்ட தவணைக் கட்டணங்கள் மட்டம் 3இற்கு மட்டும் உரித்தானது. மட்டம் 3இல் இருந்து மட்டம் 4, 5, 6 இற்குச் செல்லும்போது தவணைக்கட்டணங்களில் மாற்றங்கள் ஏற்படும் என்பதனைக் கவனத்திற் கொள்க.


***மாணவர்கள் தாங்கள் சித்தியடையத் தவறிய பாடங்களுக்குத் தங்களை மீள்பதிவு செய்துகொள்வதோடு அப்பாடநெறிக்குரிய கட்டணங்களை மீளவும் செலுத்த வேண்டும் என்பதையும் கவனத்தில் கொள்க.

### தொடர்புகளுக்கு :


இலங்கை திறந்த பல்கலைக்கழகம்,
நாவல, நுகேகொட.
0112881406/ 0112811035, 0761296881
batl@ousl.lk


ශ්‍රී ලංකා විවෘත විශ්වවිද්‍යාලය
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
The Open University of Sri Lanka

# தமிழ் மற்றும் தமிழ்மொழி கற்பித்தலில் சிறப்புக் கலைமாணி – 2026/2027





மொழிக் கற்கைகள் துறை,
மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்,
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்,
நாவல, நுகேகொடை.

# தகவலேடு

## யாருக்காக

- தமிழ்மொழியை முதன்மொழியாக/தாய்மொழியாக/இரண்டாம் மொழியாகக் கற்பிக்கும் துறையில் ஈடுபட விரும்புவோர்
- தற்போது அரச/தனியார் பாடசாலைகளில் ஆரம்பப்பிரிவு, இடைநிலை மற்றும் உயர்நிலைப் பிரிவுகளில் பணிபுரியும் தமிழ் ஆசிரியர்கள
- தமிழ்மொழி கற்பித்தலில் வாண்மைத்துவம் மிக்க தொழில்சார் தகைமைகளைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்த்திருப்போர்
- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் தமிழ் மற்றும் தமிழ்மொழிக் கற்பித்தலில் சிறப்புக் கலைமாணிப் பட்டம் ஒன்றினைப் பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள்

## நோக்கம்

1) தமிழ்மொழி, தமிழ் இலக்கியம் மற்றும் தமிழ்மொழியின் பிறதுறைசார் விடயங்களில் நிபுணத்துவம் வாய்ந்தவர்களை உருவாக்குதல்
2) ஆரம்பநிலை முதல் உயர்நிலை வகுப்புக்கள் வரையில் தமிழ் கற்பிப்பதற்கான கோட்பாடு மற்றும் செயன்முறை ரீதியிலான அறிவை வழங்குதல்.
3) கல்வியியல் மற்றும் வகுப்பறைச் செயன்முறைகள் தொடர்பான அறிவு மற்றும் திறன்களைப் பெற்றுக் கொள்வதோடு சிறந்த மனப்பாங்குகளை உருவாக்குதல்.
4) கற்றல் மற்றும் கற்பித்தலில் நவீன தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்துதல்.
5) தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிப்பதற்கான கோட்பாடு மற்றும் செயன்முறை அறிவை வழங்குதல்.
6) சிங்கள மொழி, இலக்கியம், கலாசாரம் ஆகியவற்றைக் கற்றல் மற்றும் கற்பித்தல் மூலம் பல்வேறு சமூகத்தினரி-டையே சமூக இணைவு, புரிந்துணர்வு மற்றும் நல்லிணக்கம் போன்றவற்றை மேம்படுத்துதல்.
7) தமிழ்மொழியை இரண்டாம் மொழியாகக் கற்பித்தல் தொடர்பான செயன்முறை தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு அவ்வாய்வு முடிவுகளை அதனோடு தொடர்புடைய ஆய்வு மாநாடுகள், ஆய்விதழ்கள் மற்றும் ஊடகங்களில் வெளிப்படுத்துதல்.
8) மொழிபெயர்ப்புத் திறனை விருத்தி செய்தல்.
9) படைப்பாற்றல், புத்தாக்கம், ஊக்குவிப்புக்கள், பயனுள்ள தகவல் தொடர்பு
10) தமிழ் மற்றும் தமிழ்மொழி கற்பித்தல் தொடர்பான செயன்முறை ஆய்வுகளை மேற்கொண்டு அவ்வாய்வு முடிவுகளை அதனோடு தொடர்புடைய ஆய்வு மாநாடுகள், ஆய்விதழ்கள் மற்றும் ஊடகங்களில் வெளிப்படுத்துதல் வெளிப்படுத்துதல்

## கால எல்லை

நான்கு வருடங்கள் (குறைந்தபட்சம்)

## அனுமதித் தகைமைகள்

அ) அனைத்து விண்ணப்பதாரிகளும் 18 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்

**அத்துடன்,**

ஆ) க.பொ.த உயர்தரத்தில் தமிழ் (பாட எண் - 72) உள்ளடங்கலாக மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்,

**அல்லது,**

இ) க.பொ.த சாதாரண தரத்தில் தமிழ் மற்றும் தமிழ் இலக்கியத்தில் (பாட எண் - 22) குறைந்தபட்சம் 'B' தரத்துடன் க.பொ.த உயர்தரத்தில் தமிழ்மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றி குறைந்தபட்சம் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்,

**அல்லது,**

ஈ) தேசிய கல்வியியற் கல்லூரிகளில் கற்பித்தலில் (தமிழ்மொழி) தேசிய டிப்ளோமா சான்றிதழினைப் பெற்றிருத்தல் வேண்டும்,

**அல்லது,**

உ) இலங்கை திறந்த பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஏதேனும் வேறு சமமான உயர் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

## பாட உள்ளடக்கம்

C - Compulsory Subject E - Elective Subject

### மட்டம் - 03 (பருவம் I, பருவம் II)

| | |
|---|---|
| தமிழ்மொழி வரலாறு – அறிமுகம் (C) | LEU3301 |
| தமிழ் இலக்கிய அறிமுகம் – I (C) | LEU3302 |
| தமிழ் இலக்கிய அறிமுகம் – II (C) | LEU3303 |
| தமிழ் கல்வெட்டியல் (C) | LEU3304 |
| தமிழ்மொழியில் படைப்பாக்க நுட்பங்கள (E) | LEU3305 |
| அறிவியல் தமிழ் - அறிமுகம் (E) | LEU3306 |
| இலங்கைசார் கற்கைகள் (E) | LEU3307 |
| மொழியும் தொடர்பாடலும் (C) | LEU3308 |
| தமிழ் ஓலைச்சுவடியியல் - அறிமுகம் (C) | LEU3309 |
| சிங்களமொழி - அறிமுகம் (C) | LEU3310 |
| தமிழ்மொழியில் நடைமுறை இலக்கணம் (C) | LEU3311 |
| உலக இலக்கியம் - அறிமுகம் (E) | LEU3312 |
| தமிழ் அகராதியியல (E) | LEU3313 |
| இலங்கையில் மொழிக்கொள்கை (E) | LEU3314 |

### மட்டம் - 04 (பருவம் I, பருவம் II)

| | |
|---|---|
| இடைக்காலத் தமிழ் இலக்கியம் (C) | LEU4315 |
| சிங்கள இலக்கியம் - அறிமுகம் (C) | LEU4316 |
| தமிழ்மொழி வரலாறு (C) | LEU4317 |
| நவீன தமிழ் கவிதைகள் (C) | LEU4318 |
| தமிழ் நாடகமும் அரங்கியலும் (E) | LEU4319 |
| இலங்கையின் கலாசாரப்பாரம்பரியங்கள் (E) | LEU4320 |
| மனித உரிமைகளும் மொழியும் (E) | LEU4321 |
| தமிழ்மொழியில் நவீனமயமாக்கல் (C) | LEU4322 |
| இலக்கிய நயமும் திறனாய்வும் - கோட்பாடும் பிரயோகமும் (C) | LEU4323 |
| தமிழில் சிறுகதைகள் (C) | LEU4324 |
| செவ்வியல் இலக்கியம் (C) | LEU4325 |
| நவீன இலக்கியக் கோட்பாடுகள் (E) | LEU4326 |
| பிறநாடுகளில் தமிழ்மொழிக் கற்கைகள் (E) | LEU4327 |
| இலங்கைச் சமுதாயம் - அறிமுகம் (E) | DSU4357 |

### மட்டம் - 05 (பருவம் I, பருவம் II)

| | |
|---|---|
| நவீன மொழியியல் (C) | LEU5328 |
| ஈழத்து இலக்கிய வரலாறு –(C) | ILEU5329 |
| தமிழ் நாட்டாரியல் (C) | LEU5330 |
| தமிழில் நாவல்கள் (C) | LEU5331 |
| இரண்டாம் மொழிப் பெறுகை, கற்பித்தல் மற்றும் கற்றல் தொடர்பான கோட்பாடுகளின் தோற்றப்பாடு (E) | LEU5332 |
| உள மொழியியலும் சமூக மொழியியலும் (E) | LEU5333 |
| மனித நடத்தையின் சமூக உளவியலையும் சமூக நடத்தையையும் விளங்கிக்கொள்ளல் (E) | DSU5351 |
| மொழி தொடர்பான கணிப்பீடு மற்றும் மதிப்பீட்டில் கோட்பாடும் செயன்முறையும் (C) | LEU5334 |
| மொழி வகுப்பறை முகாமைத்துவம் (C) | LEU5335 |
| மொழிக்கற்பித்தல் - கற்றலுக்கான தொழிநுட்பம் (C) | LEU5336 |
| தமிழ்மொழியில் பிழை ஆய்வு (C) | LEU5337 |
| இலங்கையில் இரண்டாம் மொழியாகத் (E) தமிழ் கற்பித்தல் தொடர்பான சிக்கல்களும் தீர்வுகளும் (E) | LEU5338 |
| ஊடகவியலில் தமிழ்மொழி (E) | LEU5339 |

### மட்டம் - 06 (பருவம் I, பருவம் II)

| | |
|---|---|
| கல்வியின் அடிப்படைகள் (C) | STU6301 |
| கற்றல் உளவியல் (C) | STU6501 |
| கற்பித்தற் பயிற்சி (மட்டம் - I, மட்டம் - II) (C) | LEU6740 |
| ஈழத்து இலக்கிய வரலாறு –(C) | IILEU6341 |
| தமிழ்மொழியில் மொழிபெயர்ப்புக் கோட்பாடுகளும் நடைமுறைகளும் (C) | LEU6342 |
| ஆய்வேடு (C) | LEU6943 |